# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் – 61 தை – பங்குனி 2016



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு – 06

அமுதம் 16 துளி 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே!!

"அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே!!"

ஆ! எவ்வளவு இனிமையான, எவ்வளவு நம்பிக்கை ஊட்டும் பெயர்! அருமைச் சகோதரர்களே! அந்த இனிய பெயரால் உங்களை அழைக்க அனுமதி தாருங்கள். நாம் ஆண்டவனின் குழந்தைகள், புனிதமானவர்கள்! பூரணர்கள்! நீங்கள் பாவிகளா? மனிதர்களை அப்படிச் சொல்வது பாவம். மனித இயல்பிற்கே அது அழியாத களங்கம். நீங்கள் சுதந்திரமான, தெய்வீகமான, நிரந்தரமான ஆன்மாக்கள்!!

ஆன்மாவின் எல்லையற்ற ஆற்றல் ஜடப்பொருளில் செயல்படும் பொழுது பௌதீக வளர்ச்சி உண்டாகிறது. எண்ணத்தில் செயற்பாட்டால் அறிவு வளர்ச்சி உண்டாகிறது. தன்னிடமே செயல்படும் பொழுது மனிதன் தெய்வம் ஆகிறான். முதலில் நாம் தெய்வங்கள் ஆவோம். அதன் பின்பு பிறரும் தெய்வங்களாகத் துணை புரிவோம். "ஆகுக, ஆக்குக" என்ற இதுவே நமது தாரக மந்திரமாக இருக்கட்டும். முழுமையுற்ற மனிதனுக்கு எல்லாமே தெய்வமாகத் தெரிகிறது. அவன் அனைத்தையும் தெய்வமாகவே காண்கிறான்.

மனித இயல்பிலுள்ள வலிமையானவை, நல்லவை, ஆற்றல் பொருந்தியவை எல்லாம் இந்த தெய்வீகத்தின் விளைவே. ஆனால் பலரிடம் இந்த தெய்வீகம் மறைந்துள்ளது. எல்லா உயிர்களும் தெய்வீகமானவை. அந்த தெய்வீகத்தை வெளிப்படுத்துவதற்கான ஆற்றல் மிகுந்தும் குறைந்தும் இருப்பதுதான் நம்மிடையே வேறுபாட்டிற்குக் காரணமாக அமைகிறது. நாம் எல்லோரும் இறைவனுடைய பிள்ளைகள எதையும் செய்யக்கூடிய ஆற்றல் நமக்கு உண்டு.

கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிரத் தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை- இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்துகொண்டிருக்கிறேன். எனவே அனைவரையும் சரிசமமாகக் கருதுவீர்களாக! நாம் அனைவரும் சரிநிகர் சமமானவர்கள். எல்லாம் வல்ல இறைவனின் அன்புக் குழந்தைகள் அல்லவா நீங்கள்! உங்களை விரும்பாமல் என்னால் எப்படி இருக்க முடியும்? உலகிலுள்ள எல்லா வாழ்த்துக்களும் உங்களுக்கு உரித்தாகுக!!!

**- சுவாமி விவேகானந்தர் -**

தொகுப்பு: **சி. அபிராமி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை



ஜனனீம் ஸாரதாம் தேவீம் ராமகிருஷ்ணம் ஜகத்குரும் |
பாதபத்மே தயோ: ச்ரித்வா ப்ரணமாமி முஹூர்முஹு: ||

**- சுவாமி அபேதானந்தஜி**

**பொருள்:**
சாரதையாம் தேவியம்மை ஜகத்குருவாம் இராமகிருஷ்ணர் ஈரிருதாள் மலர் பற்றி இறைஞ்சுவன் யான் பல்காலும்.

ஆசைக் கடலில் அகப்பட்டு, அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலிய வைத்து, ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்?- ஈசர் பாகத்து நேரிழையே.

**- அபிராமி அந்தாதி**

**பொருள்:**
அபிராமித்தாயே! எந்தன் ஈசன் இடப்பாகத்தில் தானொரு பகுதியாக அமைந்தவளே! அம்மா! நான் கொடிய ஆசையென்னும் துயரக் கடலில் மூழ்கி இரக்கமற்ற எமனின் பாச வலையில் சிக்கியிருந்தேன். அத் தருணத்தில் பாவியாகிய என்னை மணம் பொருந்திய உன்னுடைய பாதத் தாமரையே வலிய வந்து என்னை ஆட்கொண்டது தாயே! நின் அரும்பெரும் கருணையை என்னென்று உரைப்பேன்!

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.**
**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.**

**அமுதம் 16** **துளி 1**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த இதழில்...

பக்கம்


1. பிரார்த்தனை 01
2. இதழாசிரியர்களிடமிருந்து 03
3. கவிதை - *கல்பதரு தாயே!* 04
4. பஞ்சதந்திரக் கதை - *நரி சொன்ன உபாயம்* 05
5. அப்துல் கலாம் 07
6. பிருஹதாரண்யக உபநிடதம் 10
7. கடவுள் இருக்கிறாரா? 13
8. குறுக்கெழுத்துப் போட்டி 15
9. படக்கதை - *குருநானக் சொன்ன புத்திமதி* 16
10. யோகம் 18
11. படம் தரும் பாடம் 21
12. படித்துச் சுவைத்தவை - *உள்ளமே உயர்ந்த சான்றிதழ்* 22
13. சாதனையாளர் 24
14. பாப்பா பாப்பா கதை கேளு - *தண்டனை பெற்ற காகம்* 28
15. புண்ணிய நதிகள் - *சரஸ்வதி* 31
16. செய்திகள் 36


**அட்டைப் பக்கங்களில்...**


1. அட்டைப் படம்
2. அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே!!! ii
3. படம் தரும் பாடம் - வாசகர் கருத்து... iii
4. உங்கள் சிந்தனைக்கு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியர்களிடமிருந்து...

அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

புத்தாண்டு தினமாகிய ஜனவரி முதலாம் திகதி இராமகிருஷ்ண அடியார்களுக்கு முக்கியமான தினம். ஏனெனில் 1886ஆம் ஆண்டு இதே தினத்தில்தான் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் மிக உயர்ந்த நிலையில் இருந்தபடி, தன்னை அணுகிய பக்தர்களுக்கெல்லாம் உயரிய ஆன்மீக அனுபவங்களை நல்கினார். அத்துடன் "அனைவருக்கும் ஆன்மீக விழிப்புணர்வு உண்டாகட்டும்" என்று உலகையே ஆசீர்வதித்தார். இதனால் இத் தினம் கற்பகதரு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இவ் வருடம் அன்னை சாரதையே கற்பகதருவாய் வந்திருக்கிறார். ஆம்! கற்பகதரு தினமும் அன்னையின் ஜனன தினமும் ஒரே நாளாய் அமையும் பாக்கியம் இவ் வருடத்திற்குக் கிடைத்திருக்கிறது. அன்னை கற்பகதருவாய் இருந்தது ஒரு நாள் மட்டும் அல்ல. 'அன்னை' ஆனபின்பு அனைத்து நாட்களுமே அவர் கற்பகதருவாகத்தான் இருந்தார்.

**"கண்ணீருடன் என்னிடம் வருபவர்களுக்கெல்லாம் நான் முக்தியை அளிக்கிறேன்"** என்று அனைவருக்கும் அபய வாக்குக் கொடுத்திருக்கிறார் அன்னை. "என் பிள்ளைகள் அனைவருக்காகவும் நான் உழைத்துக்கொண்டே இருப்பேன். என் உடல் மறைந்த பின்னும் அவர்களை நான் கவனித்தேயாக வேண்டும்" என்று சரணடைந்தவனை முழுமையாகப் பொறுப்பெடுத்து, தான் மறைந்த பின்னும் அவனது நலனைக் கவனிப்பேன் என்று அபயம் அளிக்கும் அன்னை நித்திய கற்பகதரு அல்லவா!

குருதேவரினதும் அன்னையினதும் அருளாசியுடன் பிறந்த இப் புதுவருடத்தில் வெளிவரும் அறநெறி அமுதத்தின் முதலாவது துளியை உலக அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் தாமரைத் திருவடிகளில் சமர்ப்பிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்பதரு தாயே!

ஆயிரம் கோடி ஆதவ ஜோதி,
அடங்கிடும் ஆனந்த பொன்னொளி தேவன்!
அவனியின் கோடியில் அழைத்திடும் பக்தர்க்காய்,
அழுதிட்ட அன்பெனும் அருவிகுரு நாதன்!

அம்மா! நின்னை நினைத்திடல் போதும்!
அணையற்று நீளும் அன்பெமை ஆளும்!
அடைக்கலம் நாடி அயர்ந்திடும் நாளும்,
அன்னைநின் அன்புக் கரமெமைச் சூழும்!

அன்றொரு நன்னாள் அடியவர் பொன்னாள்!
அன்புரு அண்ணல் அணைகடந்து ஓர்நாள்,
அனைவர்க்கும் அருள்மழை பொழிந்திட்ட பெருநாள்!
அனுதினம் போற்றிடும் 'கல்பதரு' திருநாள்!


அகிலத்தை மறைக்கும் அனந்த தாயே!
அகிலத்தில் மறைந்து வாழ்ந்தனை நீயே!
அண்ணலே நீயென அருளிட, தாயே!
அற்புத கல்பதருவில் அவதரிக்கிறாய் நீயே!

தொகுப்பு: ச. **துளக்சன்**, பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஒரு அடர்ந்த ஆலமரம். அதில் வெகுகாலமாக ஆணும் பெண்ணுமாக இரண்டு காகங்கள் கூடு கட்டி வாழ்ந்து வந்தன. அந்த மரத்திலிருந்த ஒரு பொந்தில் நாகபாம்பு ஒன்று வசித்து வந்தது. அது காக்கைகள் இடும் முட்டைகளைச் சந்ததி செய்யாது சாப்பிட்டுக் கொண்டு வாழ்ந்து வந்தது.





இதனால் காக்கைகள் கவலையில் ஆழ்ந்தன. அதற்கு என்ன செய்யலாம் என்று அவை யோசித்துக் கொண்டிருக்கையில் அந்தப் பக்கம் நரி ஒன்று வந்தது. அது அக் காகங்களுக்கு முன்பே தெரிந்த நரிதான்.

## நரி சொன்ன உபாயம்

அதனால், அந் நரியை ஜாடை காட்டி அருகில் அழைத்து, அங்கு நடக்கும் சோகச் செய்தியை இரகசியமாகச் சொல்லின. "இதை எப்படியும் தடுத்தாக வேண்டுமே! என்ன செய்யலாம்?" என்று கேட்டன அக் காகங்கள்.

பஞ்சதந்திரக் கதை

உடனே நரி, அக் காகங்களை அருகில் அழைத்துத் தாழ்ந்த குரலில் பேசியது. "இதுதான் சரியான நேரம். அரசகுமாரி குளிக்கும் மஞ்சன சாலைக்குப் போங்கள். அவள் மேடையின் மீது நகைகளையெல்லாம் கழற்றி வைத்துவிட்டுத்தான் குளிப்பது வழக்கம். வெடுக்கென ஒரு நகையைக் கொத்திக்கொண்டு அங்கிருப்பவர் அனைவரும் பார்க்கும்படியாக நேரே பறந்து வந்து, அந்த நகையைப் பாம்பு வசிக்கும் இப் பொந்தினுள் போட்டு விடுங்கள். அதன் பிறகு நடப்பதை நீங்களே பார்க்கலாம்" என்றது நரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆகா! சரியான யோசனை!" என்று சொல்லிக் கொண்டே காகங்கள் பறந்து சென்றன. ஒரு தங்கச் சங்கிலியைக் கொத்திக் கொண்டு வந்து, 'தொப்'பென அந்தப் பொந்தில் போட்டன.



அக் காகங்களைப் 'பிடி பிடி' என்று துரத்திக் கொண்டு வந்த அரண்மனை வேலையாட்கள், உடனே அம் மரப்பொந்தைப் பிளந்தார்கள். உள்ளேயிருந்த நாகம் சீறிக் கொண்டு வந்தது. அதை இரண்டு துண்டுகளாக வெட்டிப் போட்டுவிட்டு, அந்தச் சங்கிலியை எடுத்துக் கொண்டு அரண்மனை திரும்பினார்கள்.



இப்படியாகக் காகங்களின் காரியம் நரி சொன்ன உபாயத்தால் நிறைவேறியது. ஆகையால் எல்லாவற்றையும் உபாயத்தினால்தான் சாதிக்க வேண்டும்.

*மூலம் : பஞ்சதந்திரக் கதை*



எவன் புத்திமானோ அவன் பலவான்.
புத்திசாலியால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை.

தொகுப்பு: **இ. ரிசிகா**, தொண்டராசிரியை,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

யாரால் உலகம் துன்பப்படுவதில்லையோ, யார் உலகத்தால் துன்புறுவதில்லையோ, யார் களிப்பு, கோபம், பயம், கலக்கம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டவனோ, அவன் எனக்குப் பிரியமானவன்.

**- பகவத் கீதை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல் கலாம்

*கடந்த இதழின் தொடர்ச்சி...*

மாணவர்களின் நாயகனாக விளங்கும் டாக்டர் கலாம் எப்பொழுதும் அவர்களை உற்சாகப்படுத்தியும் அறிவூட்டியும் வந்துள்ளார். மாணவர்களை மையப்படுத்தியே அவரது நம்பிக்கையும் கனவும் எழுப்பப்பட்டுள்ளது. அதையே தமது கடமையாகவும் கொண்டு வாழ்ந்து வந்தார்.

மேலும் "உலகம் என்ன வேண்டுமானாலும் பேசட்டும். ஆனால் நான் எனது கடமை என்னும் பாதையில் தொடர்ந்து செல்வேன். இதுவே ஒரு தலைவன் செயல் புரியும் முறை என்பதனைத் தெரிந்துகொள்" என்ற விவேகானந்தரின் வீர மொழிக்கேற்ப, தான் கொண்ட கடமையைத் தனது இறுதிநேரம் வரை தொடர்ந்து செய்தவர்தான் டாக்டர் கலாம். என்றுமே ஒரு தலைவனாக "என் கடன் பணி செய்து கிடப்பதே" என எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தன் கடமையினின்று அவர் தவறியதே இல்லை. இதை எடுத்துக்காட்டும் ஒரு சம்பவம் இதோ:

ஒருமுறை, அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்பதற்குப் பத்து மாதங்களுக்கு முன் ஓர் உலங்கு வானூர்தியில் (Helicopter) ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள பெக்காரோ என்ற இடத்தில் பயணித்துக் கொண்டிருந்தார். அவருடன் பிரதம மந்திரியின் தலைமை அறிவியல் ஆலோசகரும் பயணித்துக் கொண்டிருந்தார். பெக்காரோவிலுள்ள இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் விழாவில் பங்கேற்பதற்காக டாக்டர் கலாமை இறக்கிவிட்டுச் செல்லவேண்டும். ஆனால் நடுவானிலே பயணித்துக் கொண்டிருந்தபோது உலங்கு வானூர்தி, செயலிழந்தது. எனினும் அதிலிருந்த அனைவரும் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினர். டாக்டர் கலாமை வைத்தியசாலைக்கு வருமாறு கேட்டபோது, அவர் "இல்லை. நான் முதலில் அந்தப் பாடசாலை விழாவிற்குச் செல்லவேண்டும். எனக்காக அவர்கள் காத்திருப்பார்கள். என்னை அங்கே அழைத்துச் செல்லுங்கள்" என உறுதியாகக் கூறிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படியே அப் பாடசாலைக்குச் சென்று விழாவில் கலந்துகொண்டு அப் பள்ளி மாணவர்களுக்கு உரையாற்றினார்.



அதில் மறந்துங்கூட தனக்கு நேர்ந்த விபத்து பற்றி கலாம் குறிப்பிடவில்லை. விழா முடிந்த பின்பே மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டார். பாரிய விபத்திற்குள்ளானபோதும் தன் கடமையைச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தவர்தான் டாக்டர் கலாம். கொடுத்த வாக்கை நிறைவேற்றுதல், மாணவர்களிடமிருந்த அன்பு போன்ற பண்புகளையும் இந் நிகழ்வின் மூலம் நாம் அறிந்துகொள்ள முடியும்.

வாழ்க்கை குறித்த போராட்டத்தில் அவர் சளைக்காமல் தன்னம்பிக்கையோடு தொடர்ந்து போராடி வந்திருக்கிறார். அந்த மோசமான விபத்திற்குப் பிறகு வந்த பதினான்கு வருடங்களிலும் இது போல் பல கடினமான கட்டங்களை டாக்டர் கலாம் வெற்றிகரமாகக் கடந்துள்ளார். தன் இறுதிமூச்சுவரை தான் கொண்டுள்ள கடமையை மிகச் சிறப்பாகச் செய்துகொண்டே இருந்திருக்கிறார்.

ஒருமுறை ஒரு பத்திரிகை நிருபர் டாக்டர் கலாமிடம் “மக்கள் உங்களை யாராக நினைவில் வைத்திருக்க விரும்புகிறீர்கள்? குடியரசுத் தலைவர், விஞ்ஞானி, எழுத்தாளர், ஏவுகணை நாயகன் இந்தியா 2020...?” எனக் கேட்டதற்கு “ஆசிரியர்!” என்று பெருமிதத்துடன் விடையளித்தவர்தான் டாக்டர் கலாம். மேலும் “வாழ்வின் முடிவில் தான் நினைத்த வேலையைச் செய்துகொண்டே மரணிக்கின்றவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்” என்றும் கூறியுள்ளார்.

இன்று அவர் விரும்பியபடியே தான் தேர்ந்தெடுத்த பாதையில் தன் இறுதிப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். அவர் தன் வாழ்க்கையின் கடைசித் தருணத்தில் அவருக்கு விரும்பியவாறு மேடையில் கற்பித்துக் கொண்டே மறைந்துவிட்டார். ஒரு மகத்தான ஆசிரியராக மாணவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக வாழ்ந்து நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் விவேகானந்தரின் ஆண்மையோடும் வலிமையுடனும் வீரத்துடனும் தனது ஆளுமையை ஆணித்தரமாகப் பதிவு செய்துள்ளார். சுவாமி விவேகானந்தர் ஆவலுடன் எதிர்பார்த்த கனவு நாயகனாக, அவர் சென்ற பாதையில் தானும் சென்று மாபெரும் தலைவனாக எம்மிடையே என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் டாக்டர் கலாம். "உன்னைத் தியாகம் செய்வதால் மட்டுமே பிறரின் இதயங்களை நீ வெல்ல முடியும்" என்ற வீரத்துறவி விவேகானந்தரின் வழியில் தன் வாழ்க்கை முழுவதையுமே இளைஞர்களுக்காகவே அர்ப்பணித்துக் கொண்டார்.

உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்குண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது டாக்டர் அப்துல் கலாமின் வாழ்க்கை. உலக மக்கள் அனைவரின் இதயத்திலும் மாமனிதராக உயர்ந்து வாழ்கின்றார். எவராலும் குறை கூற முடியாத அளவிற்கு அவரது வாழ்க்கை எமக்கெல்லாம் சிறந்த பாடமாக அமைகின்றது. இவை அனைத்திற்கும் மேலாக "எதுவும் வரட்டும். உலகம் இருந்தாலும் சரி அழிந்துவிட்டாலும் சரி நான் என் கடமையை மறக்கமாட்டேன். நமக்கென வாய்க்கின்ற கடமைகளை எப்போதும் தயாரான முழுமனத்துடன் செய்துகொண்டே போகலாம். அப்போது நிச்சயம் ஒளியைக் காண்போம்" என்ற சுவாமி விவேகானந்தரின் பாதையில் வாழ்ந்து காட்டியவர்தான் டாக்டர் அப்துல் கலாம்.

எத்தனையோ உயரிய விருதுகளைப் பெற்றிருந்தபோதும், ஒரு சாதாரண மனிதராகவே இறுதிவரை வாழ்ந்த டாக்டர் கலாமின் எளிமை வாழ்க்கை என்றும் போற்றுதற்குரியது. இளைஞர்களாகிய நாம் அவரது வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு அவரது வழியில் சென்று நாமும் உயர்ந்து நாட்டையும் உயர்த்துவோமாக!

ஆக்கம்: சி. அபிராமி, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிருஹதாரண்யக உபநிடதம்

அன்பார்ந்த வாசகர்களே! சென்ற இதழில் பிருஹதாரண்யக உபநிடதத்தின் முன்னோட்டத்தைப் பற்றிப் பார்த்தோம். இவ் உபநிடதம்

அ. மது காண்டம்

ஆ. முனி காண்டம்

இ. கில காண்டம் என 3 காண்டங்களைக் கொண்டுள்ளது.

**அ. மது காண்டம். (உபதேச காண்டம்)**

உலகில் மனிதன் உட்பட எண்ணற்ற உயிரினங்கள் உள்ளன; பல்வேறு பொருட்கள் உள்ளன; தேவசக்திகள் உள்ளனர். இவர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்துள்ளனர். இறுதியில் அனைவரும் இறைவனைச் சார்ந்துள்ளனர். இந்தச் சார்பை 'மது' என்ற வார்த்தையால் இக் காண்டம் குறிப்பிடுகிறது. இச் சார்பை முக்கியமாக உபதேசிப்பதால் 'மது காண்டம்' எனவும் பரம்பொருளைப்பற்றிய உண்மைகளை உபதேசிப்பதால் 'உபதேச காண்டம்' எனவும் அழைக்கப்படுவதுண்டு. மது காண்டத்தில் 2 அத்தியாயங்கள் உள. ஒவ்வொன்றுக்கும் 6 வீதமாகப் பன்னிரண்டு பிராம்மணங்கள் உள்ளன.

முதலாவது அத்தியாயம்

இதில் அஸ்வ பிராம்மணம், அக்கினி பிராம்மணம், உத்கீத பிராம்மணம், புருஷாத்ம பிராம்மணம், ஸப்தான்ன பிராம்மணம், உக்த பிராம்மணம் என்னும் 6 பிராம்மணங்கள் உள்ளன.


**01. அஸ்வ பிராம்மணம்**

அஸ்வம் என்பது குதிரையைக் குறிக்கும். ஆற்றல், பணிவு ஆகிய சிறப்புக்கள் காணப்படுவதால் யாகங்களிலும் மனித வாழ்விலும் குதிரைக்குச் சிறப்பிடம் வழங்கப்படுகின்றது. இப்பிராம்மணத்தில் அஸ்வமேத யாகத்தை 100 தரம் செய்தவனுக்கு இந்திரப்பதவி வாய்க்கும் எனக் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு இப் பிரபஞ்சமாகத் திகழும் இறைவனோடு (விராட்புருஷனோடு) அஸ்வமேதக் குதிரை ஒப்பிடப்படுகிறது. குதிரை கடலிலிருந்து தோன்றியதாகவும் கடலிலேயே இருப்பதாகவும் குறிப்பிடப்டுகிறது. அதாவது பாற்கடலைக் கடையும்போது தோன்றிய உச்சைசிரவஸ் என்ற குதிரையிலிருந்தே குதிரையினம் தோன்றியதாகப் புராணங்கள் சொல்கின்றன.



## 02. அக்கினி பிராம்மணம்

இப் பிராம்மணத்தில் அக்கினி, விராட்புருஷனோடு ஒப்பிடப்படுகிறது. அக்கினி இரண்டு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை:

- இறைவனின் திருநாமமான 'அர்க்கன்' என்பதை அக்கினியும் பெற்றுள்ளமை.
- தண்ணீரின் மூலகாரணமாக விளங்குகின்றமை.

இறைவனிலேயே அனைத்தும் தோன்றி அவனிலேயே அனைத்தும் ஒடுங்குவதாக இப் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

## 03. உத்கீத பிராம்மணம்

இசையுடன் கூடிய ஓங்காரத்தையே உத்கீதம் என்பர். உத்கீத பிராம்மணம் என்று அழைக்கப்பட்டாலும் உண்மையில் இது பிராணனின் பெருமை பற்றிப் பேசுகிற பிராம்மணம் ஆகும்.

பிராணன் என்பது பிரபஞ்சத்தை இயக்கும் சக்தி. சூரிய சந்திரர்களின் இயக்கம், பருவ காலங்களில் மாற்றம் என்று பிரபஞ்சத்தில் என்னென்ன இயக்கங்கள் உண்டோ அவை அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழ்கின்ற சக்தி இது. அதுவே மனிதனிலும் பிராணனாகப் பல்வேறு வேலைகளைச் செய்கிறது. உடம்பும் மனமும் புலன்களும் செயல்படுவதற்கான ஆற்றலே பிராணன். எனவே, பிராணன் புலன்களைவிட, மனத்தைவிட, உடம்பைவிட உயர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் புலன்களைவிடவும் பிராணன் தூய்மையானது; அது அனைத்து அங்கங்களின் சாரம்; அறிவின் தலைவன்; உணவைப் பகிர்ந்தளிப்பதும் பிராணனே. அவ்வாறான பெருமைகளை உடைய பிராணனை வசப்படுத்துவதால் இனிய குரல், செல்வம், நல்ல உறைவிடம் ஆகிய நன்மைகள் வாய்க்கப்பெறுகின்றன.

பிராணனை வசப்படுத்துவதால் ஏற்படும் முதல் விளைவை முகத்திலேயே காண முடியும். முகபாவம் மாறும், அழகற்ற மடிப்பு மறைந்து விடும். முகம் அமைதியான சிந்தனையுடன் பொலிந்து தோன்றும். அடுத்து வருவது இனிமையான குரல். "கரகரப்பான குரலையுடைய யோகியை நான் பார்த்ததே இல்லை" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இறைவனின் திருநாமத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வதே ஜபம். "ஜபம் செய்வதன் மூலம் இறைவனின் எல்லையற்ற நிலைக்கு பக்தன் உயர்கிறான்" என ஜபத்தைப்பற்றி சுவாமி விவேகானந்தர் சுருக்கமாகக் கூறுகிறார். திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் ஒரு கருத்து மனத்தில் ஆழ்ந்து பதிகிறது. மனம் அந்தப் பாதையில் செல்லத் தொடங்குகிறது. இறுதியில் இலட்சியத்தை அடைகிறது.

மிகவும் பிரபலமான "அப்யாரோக மந்திரம்" இங்கே கூறப்படுகிறது. இதனை மீண்டும் மீண்டும் ஜபிக்குமாறு வேதம் உபதேசிக்கிறது.

ஓம் அஸதோ மா ஸத்கமய |
தமஸோ மா ஜ்யோதிர்கமய |
ம்ருத்யோர்மா அம்ருதம் கமய ||

**ஓம் சாந்திః சாந்திః சாந்திః ||**

**கருத்து:**

ஓம் அசத்தியத்திலிருந்து சத்தியத்திற்கு என்னை அழைத்துச் செல்வாயாக! அஞ்ஞான இருளிலிருந்து மெஞ்ஞான ஒளிக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! மரணத்திலிருந்து மரணமிலாப் பெருநிலைக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! ஓம். மூவகையிலும் சாந்தி நிலவுக

(தொடர்ச்சி 30ஆம் பக்கத்தில்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் இருக்கிறாரா?

ஒருநாள் ஒருவர் தலைமயிர் வெட்டுவதற்காக நாவிதனிடம் சென்றார். தலைமயிர் வெட்டியபடியே இருவரும் உரையாடத் தொடங்கினர். சிறிது நேரத்தின் பின் அவர்களின் உரையாடல் கடவுளின் பக்கம் திரும்பியது. "கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையே எனக்கு இல்லை" என்றான் நாவிதன். "அப்படியா! ஏன்?" என்று கேட்டார் மற்றவர். "கடவுள் உண்மையில் இருக்கிறார் என்றால் ஏன் இந்த உலகில் இத்தனை நோயாளிகளும் அநாதைகளும் ஏனைய துன்பங்களும் இருக்கின்றன?" என்றான் நாவிதன். மற்றவரோ நாவிதனுடன் வாக்குவாதம் செய்ய விரும்பவில்லை, அமைதியாக இருந்தார்.

தலைமயிர் வெட்டி முடிந்ததும் வெளியே கிளம்பியவர், தெருவில் ஒரு மனிதனைக் கண்டார். அந்த மனிதனோ நீண்ட காலமாக வெட்டப்படாத தலைமயிருடனும் அழுக்கான தாடியுடனும் காணப்பட்டான். இதைக் கண்டதும் அவர் மறுபடி நாவிதனிடம் சென்று, "இந்த நகரத்தில் நாவிதன் யாருமே இல்லை" என்று கூறினார். அதிர்ச்சியடைந்த நாவிதனோ, "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? இதோ நான் இருக்கிறேனே! நான் நாவிதன்தானே!" என்றான். அதற்கு மற்றவர், "இல்லை. நாவிதன் என்று யாராவது இருந்திருந்தால் தெருவிலே அந்த மனிதனைப்போல் நீண்ட தலைமயிருடனும் அழுக்கான தாடியுடனும் யாரும் இருக்க மாட்டார்கள்" என்றார்.

"ஹா.... நாவிதன் இருக்கிறான். ஆனால் சிலர் அவனிடம் வருவதில்லை" என்றான் நாவிதன். உடனே மற்றவர் பதிலளித்தார்: "அதுதான் விஷயம். கடவுள் இருக்கிறார். ஆனால் மக்கள் அவரிடம் போவதுமில்லை; அவரைத் தேடுவதுமில்லை. அதனால்தான் இவ் உலகில் இத்தனை துன்பங்களும் வேதனைகளும் இருக்கின்றன".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி எல்லா இடத்திலும் இருந்தாலும் அது எப்போதும் உணரப்படுவதில்லை. ஒரு ஆந்தை 'ஒளி என்று ஒன்று இருக்கிறது' என்று ஏற்றுக்கொள்கிறதோ இல்லையோ, ஒளி எப்போதும் இருக்கத்தான் செய்கிறது. அதைப்போலவே நாம் உணர்ந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி கடவுள் எப்போதும் இருக்கிறார். அவர் முக்காலத்திலும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். நாங்கள் அவரைத் தேட முன்னரும் அவர் இருந்தார். அவர் எங்கள் மூச்சைவிட எமக்கு நெருக்கமாக உள்ளார், எமது கை கால்களைவிட எமக்கு அருகில் உள்ளார். "பகலில் எம்மால் நட்சத்திரங்களைக் காண முடியாது. அதற்காக 'நட்சத்திரங்களே இல்லை' என்று கூற முடியாது" என்று குருதேவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் கூறுகிறார். அதுபோல இறைவனையும் நாங்கள் எமது அறியாமை காரணமாகக் காணாமல் இருக்கலாம், ஆனால் அவர் இருக்கிறார்.

"கடவுள் தனது சொந்த, கம்பீரமான, மாறாத சொரூபத்தில் தன்னை ஸ்தாபித்துக்கொண்டு இருக்கிறார். நீங்களும் நானும் அவரோடு ஒன்றிக்க விரும்புகிறோம். ஆனால் இயற்கையிலும் அற்பமான நாளாந்த வாழ்க்கையிலும் பணத்திலும் புகழிலும் மனிதர்களின் அன்பிலும் மற்றும் பந்தத்தை உருவாக்கக்கூடிய, இயற்கையின் மாறக்கூடிய அனைத்து வடிவங்களிலும் எம்மை நாமே விதைத்துவிட்டோம். இயற்கையின் பிரகாசம் எதில் தங்கியுள்ளது? இறைவனில்தான் தங்கியுள்ளது. சூரியனிலோ சந்திரனிலோ விண்மீன்களிலோ அல்ல. எங்கே எது பிரகாசித்தாலும், அது சூரியனின் ஒளியானாலும் சரி, எங்களது சொந்த உணர்வு நிலையானாலும் சரி, அது இறைவனே. அவரே பிரகாசிக்கிறார்; அனைத்தும் அவராலே பிரகாசிக்கின்றன."


**~ சுவாமி விவேகானந்தர் ~**

*மூலம்: வேதாந்த கேசரி*

தமிழாக்கம்: **க. சொரூபன்**, பழைய மாணவன் (தொண்டராசிரியர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுக்கெழுத்துப் போட்டி

விடைகள் அடுத்த இதழில்...

**இடமிருந்து வலம்**

1. திருடனாக இருந்து முனிவராக மாறினார்.
5. ஒரு நரம்புக் கருவி (திரும்பியுள்ளது).
6. சொத்து.
7. ஒரு செயலைச் செய்யும்போது ______ உடன் செய்ய வேண்டும்.
9. உள்ளம் பெருங்கோயில் _____உடம்பு ஆலயம். (திரும்பியுள்ளது)
11. திருமாலின் கையிலிருக்கும் சக்கராயுதத்தின் மறுபெயர் (திரும்பியுள்ளது).
12. அறிவு (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. தேவியை இடதுபுறம் ஏற்றதால் சிவனுக்கு ஏற்பட்ட திருநாமம்.
2. மதுரையில் வீற்றிருக்கும் அன்னை.
3. பழைய நூல்களைக் குறிக்கும் பெயர் (குழம்பியுள்ளது).
4. _____சங்கம் மனதைத் தூய்மைப்படுத்தும்.
8. செருக்கு / மமகாரம் (தலைகீழ்).
10. உலகம் அழியும் காலம்.

ஆக்கம்: **வ. வானதி**, பழைய மாணவி (தொண்டராசிரியை) இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநானக் சொன்ன புத்திமதி

கதை: சி. அபிராமி

படம்: அர்ச்சுனா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கல்வி, அறிவு, செல்வம் என்று இயற்கை நமக்கு கொடுக்கின்ற எல்லாமே பிறருக்குக் கொடுப்பதற்காகத்தான். பணம் மற்ற பொருட்கள் போன்றவற்றை கொண்டு செல்லும் சுமைதூக்கி மட்டுமே நீங்கள். இன்றோ நாளையோ நீங்கள் அனைத்தையும் விடத்தான் வேண்டும்.


- சுவாமி விவேகானந்தர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகம்




**பாதஹஸ்தாசனம்**

செய்முறை:

1. நிமிர்ந்து நேராக நிற்க வேண்டும்.
2. மூச்சை உள்ளிழுத்தவாறு கைகளை தரைக்குச் சமாந்தரமாக தோள் மூட்டுக்கு நேராக வரும்படி உயர்த்தி, பின்பு தலைக்கு மேல் நன்கு தூக்க வேண்டும்.
3. பின்பு, மூச்சை வெளிவிட்டவாறே முன்னே குனிந்து, இருகைகளாலும் கால் விரல்களைத் தொடவும். தலை இரண்டு கைகளின் நடுவிலும் இருக்க வேண்டும்.
4. இறுதியில், கைகளால் கால் பெருவிரலைப் பிடித்தவாறு முழங்கால்கள் மடியாத வண்ணம், மூச்சை வெளியே விட்டவாறு முகத்தினால் முழங்கால்களைத் தொடவும். இந்நிலையில் 2 நிமிடங்கள் வரை இருக்கவேண்டும்.
5. பின்பு, மூச்சை உள்ளிழுத்தவாறு கைகளை மேலே தூக்கி ஆரம்ப நிலைக்கு வந்து ஓய்வெடுத்துக் கொள்ளவும். இதனை மூன்றிலிருந்து எட்டு, பத்து தடவைகள் பழகலாம். நீண்ட நேரம் செய்ய முடியாதவர்கள் முதலில் ஒரு நிமிடத்திலிருந்து பின்பு படிப்படியாக நேரத்தை அதிகரிக்கலாம்.

பலன்கள்:

- தொந்தி, பக்கச் சதைகள் கரைந்து, வயிற்றுக்கு அழகையும், வடிவையும் கொடுக்கிறது.
- முதுகெலும்பை இளமைப்படுத்தி, நரம்புகளை எல்லாம் உயிர்ப்பித்து உன்னதமாய் வேலை செய்யச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மலச்சிக்கலைப் போக்குகிறது.

- அஜீரணம், வயிற்றில் வாய்வுத் தொந்தரவு, பித்தப்பையில் மந்த அசைவு ஆகியவற்றைப் போக்குகிறது.

**சசாங்காசனம்**

செய்முறை:


1. கால்கள் இரண்டையும் இணைத்து நேராக நீட்டியவாறு நிமிர்ந்து உட்கார வேண்டும். கைகளை, தொடைக்கு அருகில் வைத்திருக்க வேண்டும்.

2. பின்பு, வலதுகால் மற்றும் இடதுகாலை முறையே மடித்து அதன் மேல் உட்கார வேண்டும் (வஜ்ராசனம்). கைகளை முழங்காலில் வைக்கவேண்டும்.

3. இரண்டு கைகளையும் முதுகிற்குப் பின்னால் மடித்து, வலதுகை மணிக்கட்டை இடதுகையால் பிடித்தவாறு, முன்னே குனியவும். இயன்றளவு குனிந்து நெற்றி தரையில் படும்படி இருத்தல்வேண்டும்.

4. முன்னே குனியும் போது, பிருட்டபாகத்தை உயர்த்தாமல், குதிக்காலில் இருந்தவாறே, குனிந்து தரையை நெற்றியால் தொடவேண்டும்.

5. சிறிது நேரம் (1 நிமிடம் முதல் 2 நிமிடம் வரை) இவ்வாறு உட்கார்ந்த பின்னர், மெதுவாக உடலை நிமிர்த்தி, கைகளை முன்னே கொண்டுவந்து, கால்களை ஒவ்வொன்றாக வெளியே நீட்டி ஆரம்பநிலைக்கு வந்து ஓய்வெடுக்கவும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பலன்கள்:

- வயிறு, அடிவயிற்றுப் பாகம், குடல் முதலிய சமிபாட்டு உறுப்புகள் அடங்கிய உட்பகுதியைச் சுறுசுறுப்படையச் செய்கிறது.
- இடுப்பெலும்பை உறுதிப்படுத்துகிறது.
- நரம்புகளை ஊக்குவிக்கிறது.

**சுப்தவஜ்ராசனம்**

செய்முறை:

1. சசாங்காசனத்தில் செய்தவாறே, நேராக உட்கார்ந்து, பின் இரண்டு கால்களையும் மடித்து வஜ்ராசனத்தில் அமரவும்.
2. வலது முழங்கையைத் தரையில் ஊன்றி உடலைப் பின்புறமாகச் சாய்த்து, பின் இடது முழங்கையை ஊன்றி உடலை முழுவதுமாகத் தரையில் சாய்க்கவும்.
3. இரண்டு கைகளையும் குறுக்காகக் கோர்த்து, வலது கையால் இடது முழங்கையையும், இடது கையால் வலது முழங்கையையும் பிடித்துத் தலைக்குப் பின்னே வைத்து, மல்லாந்து படுத்திருக்கவும். இரண்டு முழங்கால் மூட்டுகளும் ஒன்றாக இணைந்து தரையைத் தொட்டவாறு இருக்கவேண்டும்.
4. 30 விநாடிகள் முதல் 1 நிமிடம் வரை இந்நிலையில் இருந்து, பின்பு மெதுவாக கைகளை அகற்றி, முழங்கையைத் தரையில் பதித்து எழும்பி ஆரம்பநிலைக்கு வந்து ஓய்வெடுக்கவும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலன்கள்:

- உடலின் கீழ்ப்பகுதிகளால் உள்ள பல நரம்புகள் புட்டங்களின் வழியாக கால், தொடையின் பின்பாகமாகச் செல்கின்றன. இந்த நரம்புகளை இவ்வாசனம் சுறுசுறுப்படையச் செய்கிறது.
- இடுப்புப் பகுதி நன்றாக இயங்க உதவுகிறது.
- கணுக்கால், கீழ் முதுகு இவற்றை நன்றாக இயங்கச் செய்கிறது.

ஆக்கம்: **இ. பிரகலாதன்**, பழைய மாணவன் (தொண்டராசிரியர்)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

## படம் தரும் பாடம்

இந்தப் படத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் பாடம் என்ன? உங்கள் கருத்துக்களை அண்ணளவாக 100 சொற்களில் எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கம் உரிய திருத்தங்களுடன் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளமே உயர்ந்த சான்றிதழ்

ஒருமுறை ஓர் அலுவலகத்தின் உயர்ந்த பதவி ஒன்றிற்காக ஏராளமான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்திருந்தனர். முதிர்ந்த அதிகாரியொருவர் அவர்களைப் பேட்டி கண்டு இறுதியில் எந்த ஒரு சான்றிதழும் கொண்டு வராத இளைஞனைத் தேர்ந்தெடுத்தார். அந்த அதிகாரியின் நண்பரொருவர், அந்த இளைஞனை ஏன் தேர்ந்தெடுத்தாரென்று அவரிடம் வினவினார். அந்த அதிகாரியும் அவனைத் தேர்ந்தெடுத்ததற்குரிய காரணங்களைக் கீழ்க்கண்டவாறு கூறினார்.


அவர் கூறியதாவது:



"அந்த இளைஞன் அறையினுள் நுழைவதற்கு முன்னதாகத் தன் காலணியை நன்றாக மிதியடியில் துடைத்துக் கொண்டு பிறகு கதவை முன்போலவே மெதுவாகச் சாத்தினான். என்னைக் காண வந்த உடல் ஊனமுற்றவனை நாற்காலியில் அமரச் செய்துவிட்டு தான் நின்று கொண்டான். இதிலிருந்து அவன் அன்புள்ளம் கொண்டவன் என்றும் வினயமுள்ளவன் என்றும் தெரிந்து கொண்டேன். என் கேள்விகளுக்கு அவன் பணிவாகவும், பெருந்தன்மையுடனும், தைரியமாகவும் பதில் கொடுத்தான். அது அவனுடைய நன்னடத்தையையும் தைரியத்தையும் காட்டியது.

**படித்துச் சுவைத்தவை**

மேசையிலிருந்து கீழே விழுந்த புத்தகத்தை எடுத்து மீண்டும் அதே இடத்தில் வைத்தான். இதிலிருந்து அவன் சுறுசுறுப்பானவன் என்று தெரிந்தது. மற்ற விண்ணப்பதாரிகள் உள்ளே வரும்பொழுதோ அல்லது வெளியே செல்லும்பொழுதோ கதவைத் தம் கால்களால் ஒரு பக்கமாகத் தள்ளிக் கொண்டு வந்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இளைஞனோ மற்றவர்களைப் போல முண்டியடித்துக்கொண்டு உள்ளே வரவில்லை. இதிலிருந்து அவன் அமைதியானவன் என்றும் நிதானமுள்ளவன் என்றும் தெரிகிறது. அவனுடைய பற்கள் பால் போல வெண்மையாவும் ஆடைகள் தூய்மையாகவும் இருந்தன. இவையெல்லாம் என் உள்ளத்தில் அவனைப்பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்திவிட்டன. அவன் எந்த ஒரு சான்றிதழும் கொண்டு வரவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவனுடைய நடத்தையே உயர்ந்த சான்றிதழாக இருந்து அந்த வேலையை வாங்கித் தந்து விட்டது". இந்தப் பதிலானது தேர்வின் தன்மையைப் பற்றி அவருடைய நண்பர் கொண்டிருந்த ஐயங்களைக் களைந்து விட்டது. மேலும் அவர் அந்த அதிகாரியைப் போற்றவும் செய்தார்.



மேற்கண்ட கதையிலிருந்து நடத்தையே உண்மை விளம்பி. நீ எப்படியோ அப்படியே உன் நடத்தை. எத்தனை காலமானாலும் சரி, நல்லவனாக இல்லாமல் நீ நல்ல விதமாக நடந்து கொள்ள முடியாது. கோபம், தற்பெருமை, வெறுப்பு, பேராசை, மதிமயக்கம், அகங்காரம், விரோதம் ஆகியவை இல்லாதிருத்தல், உண்மையைப் பேசுவது, மிதமான உணவு உட்கொள்வது, பிறர் பலவீனத்தை வெளிப்படாமல் காப்பது, பொறாமையிலிருந்து விடுபடுவது, நல்லவற்றைப் பகிர்வது, தியாகம், நேர்மை, மென்மையான பண்பு, திருப்தி ஆகியவை அனைத்து மனிதர்களுக்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட நடத்தை விதிமுறைகளாகும். இதனைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒருவர் நாளடைவில் உலகம் தழுவிய தயாள குணமுடையவராவார்.



(தொடர்ச்சி 35ஆம் பக்கத்தில்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்

வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களைக் கண்டு அஞ்சி முடங்கிவிடாமல் அதைச் சவாலாக ஏற்று முன்னேறுபவர்கள் பிரபல்யம் பெறுகின்றனர். சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர். அவ்வாறு தடைகளைக் கடந்து தன் பெயரை சாதனைப் பட்டியலில் நிலைபெறச் செய்த ஒரு பெண்தான் வைத்திய கலாநிதி ராஜலக்ஷ்மி.



ராஜலக்ஷ்மி இந்தியாவிலே பெங்களூரைச் சேர்ந்தவர். இவரது பெற்றோர் இருவருமே வைத்தியர்கள். அவர்கள் தம் வீட்டின் ஒரு பகுதியில் தனியார் மருந்தகம் ஒன்றை நடத்தி வந்தனர். உயிர்ளைக் காப்பாற்றுவதால் வைத்தியர்களை கர்நாடகத்தில் 'தேவரு' எனக் குறிப்பிடுவதுண்டு. 'தேவரு' என்றால் கன்னட மொழியில் இறைவன் என்பதாகும். இவ்வாறு தன் பெற்றோரை முன்மாதிரியாகக் கொண்டு தானும் ஒரு வைத்தியராக வேண்டும் என்பது சிறுவயது முதலே ராஜலக்ஷ்மியின் இலட்சியமாக இருந்தது. ஆவர் 10ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கையில் தன் தந்தையை இழந்து தாயுடன் வாழ்ந்து வந்தார்.

இதற்கிடையில் அவருக்கு நாகரீக ஆடை அலங்கார வடிவமைப்பிலும் (Fashion Designing) ஆர்வம் ஏற்பட்டது. ஆகையால் வைத்தியத்துறைக் கல்வியைக் குறுகிய காலத்திற்கு இடைநிறுத்தி அலங்கார வடிவமைப்பில் ஈடுபட்டார். நாகரீக ஆடை அலங்காரம் மற்றும் வடிவமைப்பு தொடர்பான கற்கை நெறியைப் பயின்று அந்த அறிவையும் வளர்த்துக் கொண்டார்.



பல் வைத்தியத்துறையில் இளநிலைப் பட்டப் படிப்பைக் கற்றார். இப் பரீட்சையில் முதல் இடத்தையும், தங்கப்பதக்கத்தையும் வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்களின் அறிவுறுத்தலின் பேரில் 2007ஆம் ஆண்டு சென்னையில் நடைபெறவிருந்த பல்வைத்தியம் தொடர்பான தேசிய மாநாட்டிலே சில பத்திரங்களைச் சமர்ப்பித்துக் கலந்து கொள்வதற்காக சென்னை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது அவர் பயணித்த கார் கனரக ஊர்தி ஒன்றிலே மோதி விபத்துக்குள்ளானார். இதன் பாதிப்பாக அவரது முள்ளந்தண்டுப் பகுதி தாக்கப்பட்டதால் இடுப்பின் கீழ்ப்பகுதி செயலிழந்து கால்கள் முடங்கி, இயக்கசக்தியை இழந்தன.

இந்தக் கோரவிபத்து அவரை வெகுவாகப் பாதித்தது. விபத்தின் பின்பு சுமார் ஆறுமாதங்கள் அவர் சுயமாக எழுந்து அமர்வதே அரிதாக இருந்தது. சக்கர நாற்காலியைப் பாவிப்பதில் அவருக்கு விருப்பம் இருக்கவில்லை. பின்பு, சக்கர நாற்காலியை உபயோகிக்க வெறுப்பதால் தான் ஓரிடத்தில் முடங்க நேரிடும் என்பதை உணர்ந்து அதில் தனக்கு உடன்பாடில்லாதபோதும் சக்கர நாற்காலியை உபயோகிக்க ஆரம்பித்ததாகவும் தற்போது அதுவே தனது உற்ற நண்பனாகத் திகழ்வதாகவும் கூறுகிறார் ராஜலக்ஷ்மி. சக்கரநாற்காலியின் உதவியுடன் நாட்டின் பல பாகங்களுக்கும், உலகின் பல இடங்களுக்கும் பயணித்துவிட்டார். இவ் விபத்து அவரை மனஅழுத்தத்திற்கு உள்ளாக்கியது.



அவரைச் சூழ இருந்தோரிடமிருந்து அவருக்கு எவ்வித உதவியும் கிட்டவில்லை. மாறாக அவரைப் பார்த்து அனுதாபப்பட்டது அவருக்கு எரிச்சலை உண்டாக்கியது. பெற்றோர், நண்பர்கள், பேராசிரியர்களின் ஊக்குவிப்பால் 2010ஆம் ஆண்டு பல் வைத்தியத்துறையிலே முதுநிலைக் கல்வியை ராஜீவ் காந்தி பல்கலைக்கழகத்திலே ஆரம்பித்தார். இறுதிப் பரீட்சையில் தங்கப்பதக்கம் வென்ற 62 மாணவர்களுள் ராஜலக்ஷ்மியும் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் வைத்திய முதுநிலைப் பட்டப் படிப்பிலே 73% புள்ளிகளைப் பெற்று கர்நாடக மாநிலத்திலே முதலிடத்தைப் பெற்றார். ஆளுநரிடமிருந்து முதலிடம் பெற்றமைக்கான தங்கப் பதக்கத்தையும், பணப்பரிசையும் பெற்றுக் கொண்டார். அதுமட்டுமன்றி திறந்த பல்கலைக்கழகத்திலே உளவியல் கற்கையிலும் முதுநிலைப் பட்டம் பெற்றார். பல் சிகிச்சைத்துறைக்கான இளநிலைப் பட்டத்தினை ஒக்ஸ்ஃபோட்



கல்லூரியில் (Oxford Dental College) பூர்த்தி செய்து அதிலும் தங்கப் பதக்கம் பெற்றார். இந்த விபத்து நிகழாவிடில் தான் இவ்விதம் சாதிக்க வேண்டும் என்று எண்ணியிருக்கவும் மாட்டேன் என்று தடையைக் கூட வெற்றிக்கான படியாகக் கூறுகிறார்.

கல்வியில் முதலிடத்தைப் பெற்ற போதிலும் பற் சுகாதார அதிகாரி பதவிக்கான அவரது விண்ணப்பம் அரசாங்கக் கல்லூரியிலே நிராகரிக்கப்பட்டது. இதனால் அவர் தனியார் பல் சிகிச்சை நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். ஆனாலும் இந்நிலை மாறவேண்டும் என்பதற்காக, தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக வழக்குத் தொடுத்தார். தகுதியற்றவர்கள் வேறு மார்க்கங்களால் உயர் பதவிகளில் அமர்த்தப்படுவது தொடர்பில் எதிர்த்துப் போராடினார். இதனால் அவர் நிராகரிக்கப்பட்ட பதவிக்கான நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டார். அரசியலமைப்பிலே காணப்படும் அங்கவீனர்களுக்கான 3% ஒதுக்கீடு உரிய முறையில் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்திப் போராடியதில் இவரோடு சேர்ந்து மற்றும் பலரும் பயன் பெற்றனர். தனது தனியார் சிகிச்சை நிலையம் மூலமாக ஏழைகளுக்கு இலவச சிகிச்சை செய்து வருகிறார். பாதிக்கப்பட்டவர்களைச் சுற்றி இருப்பவர்கள் எவ்வாறு



ஊக்கம் தருகிறார்கள் என்பதில்தான் அவர்களது வெற்றி தங்கியுள்ளது. அவர்களுக்கு ஆதரவு தராவிடினும் தாழ்த்தாமல் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாகரீக அலங்கார வடிவமைப்புத் துறையிலே ஆர்வம் கொண்டிருந்த இவர் அங்கவீனர்களுக்காக நடத்தப்படும் அழகிப் போட்டியில் கலந்து கொண்டு 2014ஆம் ஆண்டில் அழகிப் பட்டத்தினை (Miss Wheel chair) வென்றார்.

போட்டிக்கான ஆடை, அணிகளைத் தானே வடிவமைத்திருந்தார். போட்டியிலே தன்னை இலட்சக் கணக்கான அங்கவீனர்களின் பிரதிநிதியாகக் கருதுவதாக மகிழ்ந்தார். போட்டியின் போது, "நீங்கள், யாராவது ஒருவரின் வாழ்க்கையைப்போல மீள வாழ்வதற்குச் சந்தர்ப்பம் அமைந்தால் யாரது வாழ்வைத் தேர்ந்தெடுப்பீர்கள்?" என்ற கேள்விக்கு



அருமையான ஒரு பதிலளித்து நடுவர்களையும், அரங்கத்தையும் ஆச்சரியப்படுத்தினார். அவரது பதில் என்ன? "எனது வாழ்வையே தேர்ந்தெடுப்பேன். இதனால் சாதாரண மனிதனாக நான் செய்த எனது தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும். நாட்டிலிருக்கும் அங்கவீனர்களின் நிலையை முன்னேற்றுவதற்காக என்னால் செயற்பட முடியும்" என்றார். பன்முக ஆளுமை படைத்த ராஜலக்ஷ்மிக்கு 2015ஆம் ஆண்டின் அங்கவீனர்களுக்கான அழகிப் போட்டியின் ஒருங்கிணைப்பாளர் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது.

பாரிய துன்பம் வந்தபோதிலும் ராஜலக்ஷ்மி மனவலிமையை இழந்துவிடவில்லை. விபத்து தன் வாழ்வை விரோதமான முறையில் பாதிப்பதற்கு இடமளிக்கவில்லை. மாறாக, "எனது ஒரு பிறவியிலேயே இரண்டு வெவ்வேறான வாழ்வை வாழ்வதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஒன்று சாதாரண மனிதனின் வாழ்வு. மற்றொன்று அங்கவீனர்களின் வாழ்வு" என்று தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் கூறுகிறார் ராஜலக்ஷ்மி.

(தொடர்ச்சி 35ஆம் பக்கத்தில்...)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாப்பா பாப்பா கதை கேளு...

ஆற்றங்கரையில் தேங்கி இருந்த நீரில் குளித்துக் கொண்டிருந்தது காகம். காகத்தின் அருகே எலி ஓடி வந்தது. "காக்கையாரே! நீர் இந்தப்பக்கமாக வரமாட்டீரா? என்று நான்கைந்து நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீர் இப்போதாவது வந்தீரே!" என்றது எலி.



### தண்டனை பெற்ற காகம்

"எலியே! எதற்காக என்னை நான்கு நாட்களாகத் தேடிக் கொண்டிருந்தாய்?" என்று கேட்டது காகம்.

"காக்கையாரே! இந்த ஆற்றங்கரையின் அருகில் வேடன் ஒருவனின் வீடு இருக்கிறது. அந்த வேடன், அவன் குடிசையின் வெளியே தேனும், தினை மாவும் காயவைத்துள்ளான். நான் தினமும் அந்த வேடனுக்குத் தெரியாமல் தேனும், தினை மாவும் தின்று வருகிறேன். நீயும் அந்த வேடனின் குடிசைப் பக்கம் சென்றால் உன் விருப்பப்படி தேனும் தினைமாவும் தின்னலாம்" என்றது எலி.



அதனைக் கேட்ட காகம் "எலியே! அந்த வேடனை நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கிறதே! ஒருவேளை நான் தேனையும், தினை மாவையும் உண்ணும் நேரத்தில் வேடன் வந்து என்மீது அம்பினை எய்துவிட்டால் நான் என்ன செய்ய முடியும்! அதனால் எனக்கு அச்சமாக இருக்கிறது" என்றது காகம்.

"காகமே! நீயே அச்சப்பட்டால் எப்படி? நீ வேட்ன் இல்லாத நேரம் பார்த்து தேனையும், தினைமாவையும் சாப்பிடு நீ அதனை ஒருமுறை சாப்பிட்டுவிட்டால், மறுமுறையும் சாப்பிடாமல் இருக்கமாட்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதன்பின் அடிக்கடி வேடனின் குடிசைக்கு வந்துவிடுவாய்" என்றது எலி. எலியின் பேச்சைக் கேட்ட காக்கையின் வாயில் எச்சில் ஊறியது. எப்படியாவது நாம் வேடனின் குடிசைக்குப் பறந்து சென்று தேனையும், தினைமாவையும் தின்ன வேண்டும் என்று முடிவு செய்தது. உடனே அங்கிருந்து வேடனின் குடிசையை நோக்கிப் பறந்து சென்றது.

குடிசையின் முன்னே ஒரு வேப்பமரம் இருந்தது. அந்த வேப்பமரத்தின் மேல் அமர்ந்து கொண்டு வேடனின் குடிசையை நோட்டமிட்டது காகம்.

வேடனின் குடிசையின் முன்னே தேனும், தினைமாவும் காயவைக்கப்பட்டிருந்தன.

"ஆஹா! அதோ தேனும், தினைமாவும் இருக்கிறதே! எலி சொன்னது உண்மைதான். அதன் வாசனையானது எனது மூக்கைத் துளைத்துக் கொண்டிருக்கிறதே! வேடன் குடிசையில் இருக்கின்றானோ இல்லையோ என்று தெரியவில்லை! ஒருவேளை வேடன் குடிசையை விட்டு வெளியே வந்தாலும் வரலாம்! அதுவரையிலும் நாம் பொறுமையாக இந்த மரத்தில் அமர்ந்திருப்போம்" என்று மரக்கிளையில் அமர்ந்திருந்தது காகம்.

வெகுநேரம் ஆகியும் வேடன் குடிசையை விட்டு வெளியே வரவில்லை. "வேடனை இன்னும் காணவில்லை. அவன் எங்காவது வெளியே சென்றிருக்கக்கூடும்" என்பதை உணர்ந்த காகமானது மெல்ல அந்த மரத்தை விட்டுக் கீழே இறங்கிக் காயவைக்கப்பட்டிருந்த தினைமாவின் அருகில் வந்தது.

ஆசையோடு தினைமாவைக் கொத்தியபடி சாப்பிடத் தொடங்கியது காகம். 'ஆஹா! ருசியென்றால் இதுவல்லவோ உருசி! மிகவும் கொள்ளை உருசியாக இருக்கின்றதே!' என்று தன்னையே மறந்தபடி தினைமாவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது காகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்த நேரம் வேடன் குடிசையைவிட்டு வெளியே வந்தான். தினைமாவைக் கொத்திக் கொண்டிருந்த காகத்தைப் பார்த்துவிட்டான். உடனே தன் வீட்டின் உள்ளே சென்று வில், அம்பினை எடுத்து வந்தான். காகத்தின் மீது குறி பார்த்து எய்தான். அம்பானது காகத்தின் உடலில் தைத்தது. காகம் பொத்தென்று தரையில் விழுந்தது.

தரையில் விழுந்த காகம் துடிதுடித்தது. 'ஐயோ! இந்த எலியின் பேச்சைக் கேட்டு வந்து இப்படி மாட்டிக் கொண்டேனே! ஆரம்பத்திலேயே நான் எலியிடம், வேடனின் குடிசைப் பக்கம் செல்ல மாட்டேன் என்று கூறினேன். அந்த எலிதான் என்னை வற்புறுத்தி ஆசை காட்டியது. வேடனின் உணவைத் திருட்டுத் தனமாகத் தின்றதற்குச் சரியான தண்டனை கிடைத்துவிட்டது. தீயவர்களின் பேச்சைக் கேட்டுத் தீய வழியில் நடப்பவர்க்கு என் முடிவு ஒரு பாடமாக இருக்கும்' என்று நினைத்தது காகம்.

தொகுப்பு: **க. கலைவாணி**, பழைய மாணவி (தொண்டராசிரியை), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிராணனை வசப்படுத்தி இத்தகைய ஜபம் மற்றும் பிரார்த்தனைகளின் துணையுடன் ஒருவன் வாழ்க்கையை நடத்துவானாகில், அவனுக்கு இறையுலகம் இயல்பாகவே அமையும். அவன் "எனக்கு இறையுலகம் வேண்டும்" எனத் தனியாகப் பிரார்த்தனை செய்யத் தேவையில்லை என்பதையும் இறுதியாக இந்தப் பிராம்மணம் சுட்டிக்காட்டுகிறது.

ஆக்கம்: **ஜெ.காயத்திரி**, தரம் 11, இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதி நதி தோன்றியதற்கும், மறைந்ததற்கும் பின் மறுபடி தோன்றுவதற்கும் காரணமான கதை ஒன்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. அது யாதெனில்:



சரஸ்வதி நதி - பாகம் II

பிரகஸ்பதி, தேவர்களின் குரு ஆவார். அவரின் மனைவி தாரா. ஒருமுறை சந்திரன் தாராவை அபகரித்துச் சென்றுவிட்டான். சந்திரனுடைய மகனே 'புதன்' என்ற கிரகம். பிரகஸ்பதி தாராவைத் தான் மீண்டும் பெறுவதற்காக இந்திரனின் உதவியை நாடினார். இந்திரன் சந்திரனிடம் எவ்வளவோ நயமாகக் கூறியும் சந்திரன் மனம் மாறவில்லை. பொறுமையை இழந்த இந்திரன் மற்றைய தேவர்களுடன் சேர்ந்து சந்திரனிடம் போர் புரிய முற்பட்டான். இதை அறிந்த சந்திரனும் சளைக்கவில்லை. அசுரர்களின் குருவாகிய சுக்கிராச்சாரியாரின் உதவியை நாடினான். இதனால் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையில் போர் மூண்டது. முடிவில் இரு பிரிவினருக்குமிடையில் சமாதானம் ஏற்பட்டது. தாரா தன் மகன் புதனுடன் மீண்டும் பிரகஸ்பதியிடம் வந்து சேர்ந்தாள்.



இந்த யுத்தத்திற்காகச் சேகரிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்படாத பலவிதமான அபூர்வ அஸ்திரங்களையும் போர்க்கருவிகளையும் இந்திரன் விருப்பப்படி தேவர்கள் ததீசி முனிவரின் ஆசிரமத்தில் பத்திரமாக வைத்தனர். சில ஆண்டுகளின் பின் ததீசி முனிவர் இமயம் சென்று தன் தவத்தை மீண்டும் தொடங்க விரும்பினார். எனவே தேவர்கள் வைத்துச் சென்ற அஸ்திரங்களில் இருந்தும் போர்க்கருவிகளில் இருந்தும் அவைகளின் வீரியத்தைத் தனியாகப் பிரித்து எடுத்து அவ் வீரியத்தை நீரில் கரைத்துக் குடித்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அந்த அபூர்வ அஸ்திரங்களும் ஆயுதங்களும் பலமிழந்து பாழாகிவிட்டன. இக்காலகட்டத்தில் விருத்தாசுரனுடன் இந்திரன் போரிட முனைந்தான். அவ்வசுரனோ எந்த ஆயுதத்தாலோ அல்லது உலர்ந்த, ஈரமான எந்தப் பொருளாலோ தாக்கப்பட்டாலும் சாகாத வரம் பெற்றவன். இதனால் இந்திரன் தேவர்களுடன் ததீசி முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று தாங்கள் வைத்துச் சென்ற ஆயுதங்களைத் திருப்பித் தருமாறு வேண்டினர். ததீசி முனிவர் நடந்தவற்றை விவரித்துக் கூறி



அவ்வாயுதங்களின் சக்தி தன் உடலில் தங்கிவிட்டதால் பலமிழந்த அவ் ஆயுதங்கள் இப்பொழுது போருக்குப் பயன்படாது என்று விளக்கினார். ஆனால் தேவர்களோ தங்கள் ஆயுதங்கள் எப்படியும் திரும்பவும் தங்களுக்கு வேண்டும் என்று முனிவரிடம் வற்புறுத்திக் கூறினர்.

ததீசி முனிவர் அவர்களிடம், "அப்படியானால் எனது எலும்புகள் மூலமே புதிய அஸ்திரங்களைத் தயார் செய்து அவைகளையே போருக்கு உபயோகப்படுத்தலாம்" என்று



கூறினார். அதற்காகத் தமது உயிரைத் தியாகம் செய்ய எண்ணி வடக்கு நோக்கி பத்மாசனத்தில் உட்கார்ந்து தவம் செய்து தனது கபாலம் மூலம் தனது பிராணனை விட்டுவிட்டார். இதன்பின் அம் முனிவரின் மிகவும் பலம் பொருந்திய முதுகெலும்பினால் வஜ்ராயுதத்தைச் செய்தான் இந்திரன். மற்றைய எலும்புகளிலிருந்து மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் பலவற்றைச் செய்தனர். முனிவரின் முதுகெலும்பினால் செய்த வஜ்ராயுதத்தால் இந்திரன் விருத்தாசுரனைக் கொன்றுவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததீசி முனிவரின் மரணத்தைக் கேள்வியுற்ற அவரது ஒரே புத்திரன் மிகவும் துக்கமடைந்தான். இந்திராதி தேவர்கள் தங்கள் சுயநலத்திற்காகத் தன் தந்தையை உயிரிழக்கச் செய்துவிட்டனர் என உணர்ந்தான். இதனால் அவர்கள் மீது கடுங்கோபமும் ஆத்திரமும் கொண்டான். தேவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று தீர்மானித்தான். இதனால் பத்ரிகாஸ்ரமம் சென்று அங்கிருந்த அத்திமரத்தடியில் உட்கார்ந்து கடும் தவம் செய்தான்.

அந்தத் தவத்தின் மகிமையினால் அவனது தொடையில் இருந்து 'அவுர்வநாலா' என்ற கொடுந்தீ வெளிப்பட்டு அவனது கட்டளைப்படி ஒவ்வொரு தேவரையும் தாக்கி விழுங்க ஆரம்பித்துவிட்டது. இதைக் கண்டு அஞ்சிய தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட்டனர். விஷ்ணு 'அவுர்வநாலா' முன் தோன்றி அவனை ஒருவாறு சமாதானப்படுத்தினார். விஷ்ணுவின் கருத்திற்கிணங்க அந்த 'அவுர்வநாலா' என்ற அக்கினி கடலுக்குச் சென்று அந்நீரைப் பருகித் தன் தாகத்தையும் பசியையும் தணித்துக் கொள்ளச் சம்மதித்தது. ஆனால் அக் கொடுந்தீயைக் கடல்வரை கொண்டு செல்வது யார்? தன்னைச் சுமந்து செல்ல ஒரு கன்யாஸ்திரீதான் முன்வரவேண்டும் என்பது அவுர்வநாலாவின் நிபந்தனை. இந்த நிபந்தனையை நிறைவேற்ற ஒரு கன்னிப் பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் யோசனையில் மூழ்கினர் தேவர்கள்.

இக்காலகட்டத்தில் சரஸ்வதியோ கன்யாஸ்திரி. எனவே நதி உருவம் எடுத்த பின்னர் சரஸ்வதி நதி தான் இந்த 'அவுர்வநாலா' என்ற கொடுந்தீயைச் சுமந்து சென்று கடலில் சேர்க்கும் பொறுப்புக்கு ஏற்றவள் என்று தேவரும் மூவரும் தீர்மானித்தனர். விண்ணவர்களின் இக் கருத்தைக் கேட்ட சரஸ்வதி தேவாதி தேவர்களின் நலன் பொருட்டு இக் கொடிய அக்கினியைச் சுமந்து சென்று கடலில் கலப்பதற்கு முன்வந்தாள். சரஸ்வதியின் இவ்வரிய தியாகத்தை விண்ணோர் யாவரும் போற்றி மகிழ்ந்தனர். அதன்படி பத்ரிகாஸ்ரமத்தில் ததீசி மகன் தவம் செய்த அத்தி மரத்தடியிலேயே நதி உருவம் எடுத்த சரஸ்வதி 'அவுர்வநாலா' அக்கினியை ஒரு தங்கக் குடத்தில் எடுத்துச் சுமந்து சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் பொழுது எதிரிகளின் பார்வையில் மறைத்துச் செல்வதற்காக, போகும் வழியில் சில இடங்களில் வெளியில் தெரிந்தும் சில இடங்களில் பூமிக்குள் மறைந்தும் வழியில் களைப்பு ஏற்படும் பொழுது நிலத்திற்கு அடியில் ஓய்வு எடுத்துக் கொண்டும் சென்று ஒருவாறாக மேற்குக் கடலில் சேர்ந்துவிட்டாள். (இவ்வரத்தை பிரம்மன் சரஸ்வதிக்குக் கொடுத்தார்) கடலை அடைந்த அவுர்வநாலா வடவநாலா அல்லது படவாக்னி (கடல் தீ) என்று பெயர் பெற்றது. அக்கினிகள் மூன்று வகைப் பட்டது அவை:

1) படவாக்னி - கடல் தீ,

2) ஜடராக்னி - வயிற்றுப் பசி,

3) தவாக்னி- காட்டுத்தீ

இத்தீயை சரஸ்வதி எடுத்துச் செல்லும் பொழுது சரஸ்வதிக்கு வழித்துணையாக யமுனையும் 'சதத்ரு' என்ற இன்னொரு நதியும் புறப்பட்டார்கள். பின்னாளில் ஏற்பட்ட பூகம்பங்களின் காரணமாக யமுனை பிரிந்து கிழக்கு நோக்கிச் சென்று கங்கையுடன் கலந்தது. 'சதத்ரு' என்னும் இன்றைய 'சட்லெஜ் நதி' பிரிந்து மேற்கு நோக்கிச் சென்று சிந்து நதியுடன் கலந்தது.

ஆக்கம்: **சோ. பிரசோபிதா**, பழைய மாணவி (தன்னார்வத் தொண்டர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும்.
ஒருவன் செல்வந்தனாக வாழ்ந்தபோதும்
சுயநலம் இல்லாதவனாக இருந்தால்
அவனிடம் கடவுள் இருக்கிறார். கொடுப்பவன்
பாக்கியசாலியே தவிர பெறுபவன் அல்ல.
இதன் மூலம் தூய்மையும்
பரிபூரணத்தன்மையும் உன்னை வந்தடையும்.

- சுவாமி விவேகானந்தர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(23ஆம் பக்கத் தொடர்ச்சி...)

"ஒரு மனிதன் தொடர்ந்து நல்ல எண்ணங்களையே எண்ணிக் கொண்டும், நல்ல செயல்களைச் செய்து கொண்டுமிருந்தால் நல்லதையே செய்ய வேண்டுமென்ற தவிர்க்க முடியாத மனோபாவத்தை அவன் உள்ளத்தில் வளர்த்துக் கொள்வான். தீயனவற்றைச் செய்ய வேண்டுமென்று அவனாக விரும்பினாலும் அவனுடைய உள்ளத்தில் உள்ள கொள்கைப் பிடிப்பானது அவனை அவ்வாறு செய்ய அனுமதிக்காது" என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.



**********

ஆக்கம்: **சி. சாம்பவி**, உயர்தரம்,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

(27ஆம் பக்கத் தொடர்ச்சி...)

"கோழையும் முட்டாளுமே விதி என்பான்" என்கிறது சமஸ்கிருதப் பழமொழி ஒன்று. ஆற்றல் மிக்கவனோ என் விதியை நானே வகுப்பேன் என்று கூறுவான். முதுமையை நெருங்குபவர்களே விதியைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள்" என்று கூறுகிறார் சுவாமி விவேகானந்தர். அவ்வாறு தன் வாழ்வை வெற்றிப் பாதையில் வாழும் ராஜலக்ஷ்மியிடம் இருக்கும் தன்னம்பிக்கை, தைரியம், விடாமுயற்சி, ஊக்கம் போன்ற பண்புகளை நம்முள்ளும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தொகுப்பு: **வ. வானதி**, பழைய மாணவி (தன்னார்வத் தொண்டர்),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்



அக்டோபர் 18ஆம் திகதி 'அறநெறி அமுதம்' இதழின் 15ஆவது அமுதத்தின் 4ஆவது துளி கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியையையும் கொழும்பு வலய ஆரம்பப்பிரிவிற்கான ஆசிரிய ஆலோசகருமாகிய திருமதி. அகல்யா பிரபாகரன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களான சுவாமி அபேதானந்தர், சுவாமி அகண்டானந்தர், சுவாமி சுபோதானந்தர், சுவாமி விக்ஞானானந்தர், சுவாமி பிரேமானந்தர் ஆகியோரது ஜெயந்தி தினங்கள் முறையே அக்டோபர் 6, 12, நவம்பர் 23, 25, மற்றும் டிசம்பர் 19 ஆகிய திகதிகளில் அனுஷ்டிக்கப்பட்டன.



நவம்பர் 10ஆம் திகதி தீபாவளி தினம் கொண்டாடப்பட்டது.



நவம்பர் 25ஆம் திகதி திருக்கார்த்திகை விளக்கீடு எமது ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

டிசம்பர் 21ஆம் திகதி வைகுண்ட ஏகாதசி விரதம் ஆசிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.





புனித இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினத்தை முன்னிட்டுக் கிறிஸ்மஸ் தின வழிபாடுகள், பஜனை போன்றன எமது ஆசிரமத்தில் டிசம்பர் 24ஆம் திகதி இடம்பெற்றன.





2016 ஜனவரி 1ஆம் திகதி கற்பகதரு தினமும் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 163 ஆவது ஜெயந்தி தினமும் ஆசிரமத்தில் பூஜை, யாகம் மற்றும் பஜனையுடன் கொண்டாடப்பட்டது. சாரதா ஜெயந்தி 3ஆம் திகதி எமது சமய பாடசாலை மாணவர்களால் கொண்டாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழில் 'படம் தரும் பாடம்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட படத்திற்கு எமது இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலையைச் சேர்ந்த பழைய மாணவி உ. கீர்த்திகா எழுதிய கருத்து...



# படம் தரும் பாடம்

*-வாசகர் கருத்து...*

உடலளவில் குறைகள் காணப்பட்டாலும் ஒருவர் தன் மனதளவில் தன்னம்பிக்கையும் முயற்சியையும் கொண்டிருப்பாராகில் வாழ்க்கையைச் சிறப்புற வாழமுடியும் என்ற சான்றோரின் கூற்றினை நிரூபிக்கும் விதமாக இப் பெண் மாற்றுத்திறனாளியாக இருந்த போதிலும் தன்னுடைய தன்னம்பிக்கையையும் முயற்சியையும் கொண்டு தன் திறமையினை வெளிப்படுத்திப் பிறருக்கு உதாரணமாகத் திகழ்கிறார். நம்முடைய வாழ்க்கையானது சிறப்புறுவதற்கு தன்னம்பிக்கையும் முயற்சியும் அத்தியாவசியமானதாகும்.

மனம் தான் எல்லாவற்றிற்கும் காரணமாய் அமைகிறது. *"இல்லை என்று ஒருபோதும் சொல்லாதே. என்னால் இயலாது என்று ஒருநாளும் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லா ஆற்றல் பெற்றவன். எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே நிறைந்திருக்கின்றன. நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். எல்லையற்ற நம்பிக்கையும் வலிமையும் தான் வெற்றிக்கு உரிய நியதிகள்"* என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

நாமும் சுவாமிஜியின் அறிவுரைப்படி, இப்பெண்ணைப் போல் நம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும், மனவுறுதியுடனும் செயல்படுவோமானால் எக்காரியத்திலும் வெற்றி பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...

இராஜஸ்தான் மாநிலம், துங்கர்பூர் மாவட்டம், இராஸ்தாபால் என்ற கிராமத்தைச் சேர்ந்த சின்னஞ்சிறு வனவாசிப் பெண், தலையில் புல்லுக்கட்டு, கையில் கருக்கரிவாளுடன் தன் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். அவள் செல்லும் வழியில் ஒரு திடுக்கிடும் காட்சியைக் காண நேரிட்டது. அவளது வகுப்பாசிரியரை ஆங்கிலேயக் காவலதிகாரிகள் ஓடுகின்ற வாகனத்தின் பின் கட்டி இழுத்துச் சென்று கொண்டிருந்தனர். அத்துடன் பல ஆங்கிலேயக் காவல் துறை அதிகா-ரிகளும் அவ் வாகனத்தைச் சூழ்ந்து சென்றுகொண்டிருந்தனர்.

இதைக் கண்ட சிறுமி எதையும் பொருட்படுத்தாது தனது ஆசிரியரை விடுவிக்குமாறு கூக்குரலிட்டுக் கொண்டு அவ் வாகனத்தை நோக்கி ஓடினாள். அவ்வாறே மற்ற வனவாசிகளும் அவ் வாகனத்தை நோக்கி ஓடி வரத் தொடங்கினார்கள். இவற்றைக் கண்ட ஒரு காவல் அதிகாரி, முன்னால் ஓடி வந்துகொண்டிருக்கும் சிறுமியைத் நோக்கி துப்பாக்கியை நீட்டியபடி, "ஏய்! ஓடி வராதே! வந்தால் சுட்டுவிடுவேன்!" என்றான். ஆனால் இவை எதுவும் சிறுமியின் காதில் விழவில்லை. அவள் வேகமாகக் கையிலிருந்த கருக்கரிவாளால் ஆசிரியரைக் கட்டியிருந்த கயிற்றை அறுத்து விட்டாள். ஆனால், அந்தோ! அக் காவல் அதிகாரி ஆத்திரத்துடன் துப்பாக்கியின் விசையை அழுத்த, சிறுமி "காளீமாயீ!" என்று ஓலமிட்டபடி துடிதுடித்துக் கீழே விழுந்து இறந்தாள். இவற்றைக் கண்ட அக் கிராமவாசிகள் ஆவேசத்துடன் அக் காவலதிகாரிகள் மீது பாய்ந்தார்கள். உடனே அங்கிருந்த காவலதிகாரிகள் அவ் வாகனத்தில் ஏறித் தப்பியோடிவிட்டனர். அந்தச் சிறுமியின் தியாகத்தில் உயிர் தப்பிய அவ் ஆசிரியர், அதற்கு நன்றிக்கடனாகத் தமது வாழ்நாள் முழுவதும் அந்த வனவாசி மக்களுடன் வாழ்ந்து அவர்களுக்குக் கல்வித் தொண்டாற்றினார்.

மாணவர்களாகிய எமக்கு இச் சம்பவம் பல அரிய படிப்பினைகளை எடுத்துக் காட்டுகின்றது. அச் சிறுமியின் குரு பக்தி, யாருக்கும் அஞ்சாத வீரம், உயரிய தியாகம் போன்ற பல நற்குணங்களை நாம் ஒவ்வொருவரும் முயன்று வளர்த்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு ரூ. 10.00